**செ.வெ. எண்: 283** **நாள்: 10.05.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (10.5.2012) தலைமைச் செயலகத்தில், 2011–ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஆசிய பளுதூக்கும் சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற செல்வி கே. மாலா அவர்களுக்கு சிறப்பு பரிசாக மூன்று லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசினை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வாகை சூடி தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீரங்கனைகளைப் பாராட்டி அவர்களையும், மற்ற விளையாட்டு வீரர்களையும் ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

அவ்வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்காக பல்வேறு செயல் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருவதுடன், ஊக்கத் தொகையும் அளித்து பாராட்டி வருகிறார்கள். அதனடிப்படையில், 2011–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பான் நாட்டின் கோபே நகரில் (Kobe City) நடைபெற்ற ஆசிய பளுதூக்கும் சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த செல்வி கே. மாலா அவர்களுக்கு இன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சிறப்பு பரிசாக 3 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசினை வழங்கி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து ரொக்கப் பரிசினை தனது குடும்பத்தினர் மற்றும் பயிற்சியாளருடன் பெற்றுக் கொண்ட செல்வி கே. மாலா, தன்னை ஊக்குவிக்கும் வகையில் ரொக்கப் பரிசினை வழங்கி வாழ்த்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர்நலத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் - செயலர் ஆகியோர் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 10.5.2012